ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,506 — 1958 අගෝස්තු 29 වැනි සිකුරාදා — 29.8.1958

11,506 ம் இலக்கம்— 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 29 திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## உள்ளூர் ஆட்சி அறிவித்தல்

L.G.D.—BC. 485.

### ஆடுமாடடிப்போர் சட்டம்

ஆடு மாடடிப்போர் சட்டத்தின் (அத்தியாயம் 201) 22 ம் பிரிவின்கீழ் அதற்கான தக்க அதிகாரத்தாரால், அதாவது காத்தான்குடி பட்டணச் சங்கத்தால், ஆக்கப்பட்டு, 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ந் திகதி வெளியான 9,773 ம் இலக்க விசேஷ " கெசெற்றில்" பிரசுரிக்கப் பட்ட பிரகடனத்தால் திருத்தப்பட்ட அப்பிரிவு, உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சர்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு அவரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரமாணங்கள்.

வி. சி. ஜயசூரிய,
பதில் நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1958 ம் ஹ்ல ஒகஸ்ட் மீ 19 ந் உ.

#### பிரமாணங்கள்

1. சட்டத்தின் 21 ம் பிரிவின்படி வெளியாங்கப்படுத்தி பிரகடனம் செய்த பகிரங்க ஆடுமாடடிக்கும் கொட்டில் வைத்திய சௌக்கிய உத்தியோகத்தரின் அல்லது. எவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் எவரதும் பொறுப்பில் இருத்தல் வேண்டும். அந்த வைத்திய உத்தியோகத்தர் அல்லது அதிகாரம்பெற்ற வேறு உத்தியோகத்தர் தான் அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் ஒழுக்க நெறிக்கும் சுகாதார நிலைமைகளுக்கும் பொறுப்பாளியாக இருத்தல்வேண்டும்.

2. (1) எவரேனும், அந்த ஆடுமாடிக்கும் கொட்டிலில், எம்மிருகத்தையும்—

(அ) அம்மிருகம் வைத்திய சௌக்கிய உத்தியோகத்தராலாவது அல்லது அதன் பொருட்டு சங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தராலாவது சோதிக்கப்பட்டு, மனிதர் உண்பதற்காக கொல்லுவதற்குதகுதி யானதென்று அவ்வுத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி ; அல்லது

(ஆ) எந்நாளிலேனும் காலை 6 மணிக்கும் மத்தியானம் 12 மணிக்கு மிடையேயன்றி,

கொல்லலாகாது ; ஆயின் அக்கிராசனர் விசேஷ சந்தர்ப்பங்களில் இதில் சொல்லப்பட்டதல்லாத எச்சமயத்திலும் எம்மிருகத்தையும் கொல்லுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(2) எவரேனும், அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலில், எம்மிருகத்தையும்—

(அ) பந்தி (1) ன் கீழ் அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து முப்பது மணித்தியால நேரம் முடிந்த பின்னர் எச்சமயத்திலும், அல்லது

(ஆ) பந்தி (1) ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின், அது ஆடுமாடடிக்கும் கொட்டில் தலத்திலிருந்து உயிருடன் அப்புறப்படுத்தப்பட்டிருந்தால், அது மறுபடியும் அப்பந்தியின்கீழ் சோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக கொல்லுவதற்கு தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்டாலன்றி கொல்லலாகாது.

3. ஆடு மாடடிக்கும் கொட்டில் தலத்துக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அத்தலத்தில் நிற்கையில் அதற்குப் போதிய தீனும் தண்ணீரும் கிடைக்கச்செய்வதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும்.

4. ஆடுமாடிக்கும் கொட்டில் தலத்துக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும், அம்மிருகம் கொல்லுவதற்குத் தகுதியற்றதென்று நிராகரிக்கப்பட்டால், அது நிராகரிக்கப்பட்டதும், அம்மிருகத்தை அத்தலத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் அல்லது அப்புறப் படுத்துவிக்க வேண்டும்.

5. எந்த மிருகமும் 2 ம் பிரமாணத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயுள்ளதாகவோ அல்லது மனிதர் உண்பதற்காக கொல்லுவதற்குத் தகுதியற்றதாகவோ காணப்படின், 2 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தர் எவரும், அதனைக் கொல்லவிடாது தடுக்கலாம்.

6. ஆடு மாடடிக்கும் கொட்டிலில் கொல்லப்பட்ட எந்த மிருகத்தினதும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளது அல்லது மனிதர் உண்பதற்குத் தகுதியற்றது என்று 2 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தர் எவரேனும் அபிப்பிராயப்பட்டால், அந்த உத்தியோகத்தர், அந்த இறைச்சியை அல்லது கழிவு இறைச்சியை உடனே அழித்துவிடவோ அல்லது விற்பனைக்கு வைக்காமல் அல்லது மனிதர் உண்பதற்கு உபயோகிக்காமல் தடுக்கக்கூடியதாக ஒழித்துவிடவோ செய்வார்.

7. ஆடு மாடடிக்கும் கொட்டிலின் பொறுப்பு உத்தியோகத்தர், மனிதர் உண்பதற்காகக் கொல்லுவற்குத் தகுந்ததென அங்கீகரிக்கப்படாத அல்லது 5 ம் பிரமாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டபடி கொல்லுவது தடுக்கப்பட்ட எம்மிருகத்தையும் கொல்லவிடலாகாது.

8. (1) மனிதர் உண்பதற்குத் தகுதியற்றதென 6 ம் பிரமாணத்தின் கீழ் வெளியாங்கப் படுத்தப்பட்டுள்ள இறைச்சி அல்லது கழிவு இறைச்சி எதையும், 2 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தர் எவரதும் கட்டளையின்பேரிலன்றி, எவரும் ஆடுமாடடிக்கும் கொட்டிலிலிருந்து அகற்றக்கூடாது.

(2) மனிதர் உண்பதற்கான எந்த மிருகத்தினதும் சடலத்தையும், அச்சடலத்தின் முன்தொடைகளிலும் பின்தொடைகளிலும், ஆடுமாடடிக்கும் கொட்டிலின் பொறுப்பு உத்தியோகத்தரால் "T.C., Kattankudy" என்னும் அடையாளமும் காரியத்துக்கேற்ப " ஆஸ்திரேலியன் மாட்டிறைச்சி ", "நாட்டு மாட்டிறைச்சி " அல்லது " ஆட்டிறைச்சி " என்னும் வார்த்தைகளும் முத்திரை குத்தப்பட்டிருந்தாலன்றி ஆடுமாடடிக்கும் கொட்டிலிலிருந்து எவரேனும் அகற்றலாகாது.

9. ஒரு மிருகம் வேறு எந்த மிருகத்தினதும் முன்னிலையிலாவது அல்லது அத்தலத்தில் அதற்குமுன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அத்தலம் சுத்தம்பண்ணப்படும்வரையிலாவது கொல்லப்படலாகாது.

10. (1) ஆடுமாடடிக்கும் கொட்டிலை உபயோகிப்பதற்கு கீழ்க்காணும் விகிதப்படியான ஒரு கட்டணம் சங்கத்துக்கு முதலில் கொடுக்கப்பட வேண்டும். கட்டணம் செலுத்தியமைக்குச் சான்றாக உத்தியோக பூர்வமான பற்றுச் சீட்டொன்று இல்லாமல் ஒரு மிருகத்தையும் கொல்ல அனுமதிக்கலாகாது :—

| | | |
|---|---|---|
| | ரூ. | ச. |
| மாடுகளுக்கு, தலைக்கு .. .. | 2 | 50 |
| செம்மறியாடுகளுக்கு அல்லது வெள்ளாடுகளுக்கு தலைக்கு | | 50 |

(2) ஒரு மிருகம் 2 ம் பிரமாணத்தின்படி மனிதர் உண்பதற்காகக் கொல்லுவதற்குத் தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்டிருக்குமாயின் அம்மிருகத்தை ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் விடுவதற்கு முன்னர் கட்டணம் செலுத்தியமைக்குச் சான்றாக உத்தியோகபூர்வமான பற்றுச் சீட்டு ஒன்றைக் காட்டவேண்டியது அவசியமன்று.

(3) ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு மிருகம் தகுதியற்றதென நிராகரிக்கப்பட்டாலேனும் அல்லது கொல்லுவதற்குத் தகுதியானதென அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர், ஆடுமாடடிப்பவரால், கொல்லாமல் கொண்டுசெல்லப்பட்டாலேனும் அந்த மிருகத்தின்பொருட்டு இப்பிரமாணத்தின் (1) ம் பந்தியின் கீழ் செலுத்திய கட்டணத்தை சங்கம் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும்.

**11.** ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குப் பொறுப்பாளியாக இருப்பவர் கீழ்க்காணும் மாதிரியில் ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குக் கொண்டு செல்லப்படும் மிருகங்கள் அனைத்தினதும் இடாப்பு ஒன்றை வைத்திருக்க வேண்டும் :—

| மாட்டின் பற்றுச்சீட்டிலக்கம் | வர்ணனை | நிறம் | வயது | குறிசுட்ட அடையாளங்கள் | | ஆடுமாடடிப்பவர் பெயர் | மாட்டுத் தொழுவத்துக்குள் வந்த திகதியும் நேரமும், | சோதிக்கப்பட்ட திகதி | கொல்லப்பட்ட திகதி | ஆடுமாடுகளைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தரின் முதலெழுத்துக் கை யொப்பம் | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வலப்பக்கம் | இடப்பக்கம் | | | | | | |
| | | | | | | | | | | | |

**12.** இப்பிரமாணங்களில்—

" சங்கம் " என்பது காத்தான்குடிப் பட்டணச் சங்கம் எனப்பொருள் படும் ;

" தலைவர் " என்பது காத்தான்குடிப் பட்டணச்சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

" வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் " என்பது மட்டக்களப்பு வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் எனப்பொருள்படும் ;

" சட்டம் " என்பது ஆடுமாடிப்போர் சட்டம் (அத்தியாயம் 201) எனப் பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.